செ.வெ.எண்.504/2021 நாள்.08.11.2021

**திருப்பத்தூர் நகராட்சி புதுப்பேட்டை சாலையில் அமைந்துள்ள ரயில்வே மேம்பாலம் அருகில் தேங்கியுள்ள மழைநீரை அகற்றும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.**

திருப்பத்தூர் நகராட்சி புதுப்பேட்டை சாலையில் அமைந்துள்ள ரயில்வே மேம்பாலம் அருகில் தேங்கியுள்ள மழைநீரை அகற்றும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் 78.60 மி.மீட்டர் மழையளவு, ஆம்பூர் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் 59.40 மி.மீட்டர் மழையளவு, நாட்றம்பள்ளி வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் 29.40 மி.மீட்டர் மழையளவு, வாணியம்பாடி வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் 36.00 மி.மீட்டர் மழையளவு மற்றும் திருப்பத்தூர் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் 20.20 மி.மீட்டர் மழையளவு இன்று பதிவாகியுள்ளது. இதன் காரணமாக திருப்பத்தூர் நகராட்சிகுட்பட்ட புதுப்பேட்டை செல்லும் வழியில் அமைந்துள்ள ரயில்வே மேம்பாலம் அருகே தேங்கியுள்ள மழைநீரை உடனடியாக வெளியேற்றப்பட வேண்டும் எனவும் இப்பகுதியில் உள்ள கால்வாய்களில் அடைப்பு ஏதும்ஏற்பட்டிருந்தால் அதனை உடனடியாக சரிசெய்ய வேண்டும் எனவும் நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் மழைநீர் தேங்காதவாறு தீவிரமாக கண்காணிக்க வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நகராட்சி பொறியாளர் அவர்களுக்கு ஆணையிட்டார்கள்.

இந்த ஆய்வில் நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு திரு.லோகநாதன், வட்டாட்சியர் திரு.சிவபிரகாசம், நகராட்சி பொறியாளர் திருமதி.உமாமகேஸ்வரி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**